1973 நவம்பர் 22]

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பதில் கூறும்பொழுது, சமரசம் ஏற்பட்டு விட்டது என்று கூறினார்கள். இந்த சமரசத்தை ஏற்படுத்தியவர்கள் யார்? போலீஸுக்குப் போன பிறகு போலீஸாரால் செய்யப்பட்டதா அல்லது அதிகாரிகளுக்குள்ளாகவே ஏற பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சமரசம் ஏற்பட்டுவிட்டது என்று மட்டும் தெரிகிறது. அதற்குக் காரணமாக இருந்த வர்கள் யார் என்று குறிப்பு இல்லை. சமரசம் என்பதே, தகராறுக்குரிய இரண்டு பேரும் ஒத்துப் போன பிறகுதான் ஏற்படக்கூடியது. அந்த வகை யில் போலீஸ் வழக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது.

ஆனால் இலாகா மூலமாக, ஒரு அரசுத் துறையினுடைய அலுவலர் ஒரு வருடைய பணியைச் செய்ய விடாமல் தடுத்தார் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றிய விவரம் இப்பொழுது இல்லை.

Starting of a Law College in Madurai

* 38. *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Senate and the Syndicate of the Madurai University have recommended to the Government of Tamil Nadu to start a Law College in Madurai ; and

(*b*) if so, the action taken thereon ?

மதுரையில் சட்டக் கல்லூரி அமைத்தல்

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு, நிர்வாகக்குழு ஆகியவை மதுரையில் சட்டக்கல்லூரி ஒன்றைத் தொடங்குமாறு அரசுக்குப் பரிந் துரைத்துள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

[1973 நவம்பர் 22

THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, I was myself present at the meeting of the Senate at which this resolution was passed and I have a copy of the Syndicate resolution deciding to recommend it to the Government. May I, therefore, request the Hon. Minister to see if there is such a recommendation and take urgent action since the Madurai University may not be said to be complete without a Faculty of Law and a Law College?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மதுரைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழு அல்லது செனட் குழுவினிடமிருந்து அரசாங்கத்திற்கு எந்தக் கடிதமும் வரவில்லை. சென்னை சட்டக் கல்லூரி இயக்குநர் அவர்கள் மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி ஏற்படுத்தலாம் என்ற ஒரு குறிப்பை அனுப்பி வைத்தார். அது முதலில், 1972-73-ல் ஆராயப்பட்டு, இப்பொழுது தேவையில்லை என்று தள்ளி வைக்கப்பட்டது. மறுபடியும் ஆராயப்பட்டு, மதுரையில் அதற்கான வசதிகள், கட்டிடங்கள் முதலியவை ஏற்படுத்த வேண்டியிருக்கின்ற காரணத்தால், அங்கே ஒரு சட்டக் கல்லூரி ஏற்படுத்துவது சம்பந்தமாக முடிவு தள்ளி வைக்கப்பட்டது. இப்பொழுது சென்னையில் படித்து வெளியேறுகின்றவர்களுக்கே வேலையில்லாத நிலைமை அதிகமாக ஏற்படுகின்றபோது, மேலும் ஒரு சட்டக் கல்லூரி ஏற்படுத்தும் யோசனை தள்ளி வைக்கப்பட்டது.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, தென் மாவட்டப் பகுதி மக்கள் சென்னையில் வந்து சட்டக் கல்லூரியில் படிக்க வேண்டுமானால், 500 மைல்களுக்கப்பால் வரவேண்டியிருக்கிறது. இதனால் பலவிதமான கஷ்டங்கள் அவர்களுக்கு ஏற்படுகிறது. மதுரைப் பல்கலைக்கழகம் பல்கலை நகருக்குப் போய்விட்டதால், அந்த இடம் இப்பொழுது காலியாக இருக்கிறது. நகரப் பூங்காவை ஒட்டிய, பழைய பல்கலைக் கழக இடத்தில் சட்டக் கல்லூரியை அமைக்கலாம். கோர்ட்டுகளுக்குப் பக்கத்தில் இருக்கிறது. மதுரை செனட், சிண்டிகேட் சபை, மதுரை மக்கள் எல்லோரும் விரும்புகிறார்கள். அரசாங்கம் ஏற்கெனவே முடிவு செய்திருந்தாலும்கூட, அதை மீண்டும் பரிசிலனை செய்து அதற்கு அனுமதி வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பை அறவே தள்ளிவிடவில்லை. தள்ளி வைத்துக்கொண்டிருக்கிறோம். மீண்டும் ஆராய்வதற்கு சூழ்நிலை வருமேயானால், அப்பொழுதே அதைப்பற்றி ஆராயப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.